**தலைப்பு 324 – கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 204 - முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துல கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.3 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்பட்டிராமை | 2.2.1 |
| | | 2. கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதிலான குறைபாடுகள் | 2.5 |
| | | 3. எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் பெறப்பட்டிராமை | 2.2.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை. | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது திறைசேரியால் கேட்கப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் சரியான காலநேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகவும் | செயல்நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்படாமை | 2.2.1 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான பணிப்பொறுப்புக்கள்

(அ) அரச துறையில் உள்ளக கணக்காய்வின் தரம் மற்றும் செயற்திறனை அதிகரிப்பதற்கான பிரதான நிறுவனமாக செயற்படல்.

(ஆ) அமைச்சு, விசேட செலவின அலகுகள் மற்றும் விசேட திணைக்களங்களின் கீழுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களின் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல்.

(இ) உள்ளக கணக்காய்விற்காக வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தல்.

(ஈ) உள்ளகக் கணக்காய்வு பிரிவின் இணைப்பு மற்றும் தேவையான வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.

(உ) அரச துறையின் உள்ளக கணக்காய்வாள்களின் உள்ளக கணக்காய்வு திறன்கள் அபிவிருத்தி செய்தல்.

(ஊ) அமைச்சு மற்றும் விசேட செலவின அலகுகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் வழிகாட்டல்.

(எ) விசேட புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஏ) அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டங்களுக்கு பங்குபற்றல் மற்றும் திறைசேரி அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பித்தல்.

**2.2 செயலாற்றல்**

---

**2.2.1 திட்டமிடல்**

---

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்பது பிரதான பணிப்பொறுப்புக்கள் காணப்படுவதுடன், திணைக்களத்தின் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கமைய தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை**

---

**எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பட்டிராமை**

---

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டத்தை அடையப்பட்டிராத பல்வேறு சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு.

(அ) விசேட புலனாய்வு நடவடிக்கைகளூடாக அரச துறைக்கு ஏற்படும் மற்றும் ஏற்படக்கூடிய முறைகேடுகளை வெளிப்படுத்தல் மற்றும் அவ்வாறான நிலமைகள் மற்றும் சம்பவங்களை தடுப்பதற்கு பரிந்துரைகள் மற்றும் நிவாரண நடவடிக்கைகளை பரிந்துரை செய்தல் திணைக்களத்தின் நோக்கமொன்றாகும். எவ்வாறெனினும், 2016 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்றவாறுள்ள 2017 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டிராத 4 விசேட புலனாய்வுகள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதி அமைச்சின் கீழான செயற்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வொன்றினை மேற்கொள்ளல் முகாமைத்துவ திணைக்களத்தினை தாபிக்கும் போது நோக்கமாக கொள்ளப்பட்ட பிரதான பணிகளில் ஒன்றாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், 2017 ஆம் ஆண்டின் போது ஒரு செயற்திட்டத்திற்குரியதாக மாத்திரம் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) உள்ளக கணக்காய்விற்காக வழிகாட்டிகளை வழங்குதல் திணைக்களத்தின் பிரதான பணியொன்றாவதுடன், அதற்கான செயலாற்றல் கணக்காய்வொன்று மற்றும் விசேட புலனாய்வுகளை நடாத்துவதற்காக இரண்டு வழிகாட்டிகளை வெளியிடுவதற்கு 2014 ஆம் ஆண்டின் போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அந்த வழிகாட்டிகள் 2017 ஆம் ஆண்டின் போது வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், சுமார் நான்கு வருட காலத்தின் இறுதியில் 2017 ஆம் ஆண்டு முடிவடையும் வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஈ) முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரிய முறையில் நடாத்துவதற்காக DMA/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையை மேலும் மேம்படுத்தல் 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான திருத்தமொன்று மீளாய்வொன்றினுள் இடம்பெற்றிருக்கவில்லை.

2.3 **கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியினுள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **செலவு வகை** | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| **2013** | மீண்டுவருபவை | 25.71 | 22.08 | 3.63 | 14.12 |
| | மூலதனம் | 1.6 | 1.33 | 0.27 | 16.88 |
| | **மொத்தம்** | **27.31** | **23.41** | **3.9** | **14.28** |
| **2014** | மீண்டுவருபவை | 26.3 | 24.65 | 1.65 | 6.27 |
| | மூலதனம் | 1.6 | 1.32 | 0.28 | 17.5 |
| | **மொத்தம்** | **27.9** | **25.97** | **1.93** | **6.92** |
| **2015** | மீண்டுவருபவை | 30.46 | 30.39 | 0.07 | 0.23 |
| | மூலதனம் | 1.5 | 1.31 | 0.19 | 12.67 |
| | **மொத்தம்** | **31.96** | **31.7** | **0.26** | **0.81** |
| **2016** | மீண்டுவருபவை | 42.54 | 41.32 | 1.22 | 2.87 |
| | மூலதனம் | 1.87 | 1.68 | 0.19 | 10.16 |
| | **மொத்தம்** | **44.41** | **43.00** | **1.41** | **3.17** |
| **2017** | மீண்டுவருபவை | 46.91 | 43.57 | 3.34 | 7.12 |
| | மூலதனம் | 4.9 | 2.34 | 2.56 | 52.24 |
| | **மொத்தம்** | **51.81** | **45.91** | **5.90** | **11.39** |

**மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை**

03 செலவின விடயங்களுக்காக ரூபா 2.6 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அந்த செலவின விடயங்களில் பயன்படுத்தப்பட்ட பின்னரான சேமிப்பானது ரூபா 2.33 மில்லியனாக இருந்தது. அதற்கமைய செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 56 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவிலான நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

2.4 **மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகைப் பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 30.49 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய நபரொருவருக்கான செலவினம் ரூபா 781,802 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 17 | 14 | 03 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 23 | 17 | 06 |
| (iii) | ஆரம்ப மட்டம் | 13 | 08 | 05 |
| | மொத்தம் | 53 | 39 | 14 |